



மதுராந்தகம் (தனி) இடைத்தேர்தலில் சோழந்தாங்கல் பாகம் 238 ல் ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12வது மண்டல குழு தலைவருமான என். சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் பா. குணாளன் தலைமையில், நேற்று 23.9.2026 காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சருமான, தா.மோ. அன்பரசன் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் இ. பரந்தாமனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர். டி. பூபாலன், இரா. பாஸ்கரன், மாநில சுற்றுச்சூழல் பணி துணை அமைப்பாளர் சாய்காந்த் பாரதி, வட்ட கழக செயலாளர்கள் ஜெ. நடராஜன், இ.உலகநாதன், கே. ஆர். ஜெகதீஸ்வரன், ஏ.வேலவன் ஏ.ஆர். சரவணா, செல்வேந்திரன், ரவி, குமரன் மாமன்ற உறுப்பினர் ஏ. சாலமோன், கிளைச் செயலாளர் மாரியப்பன், சுரேஷ், மகாலிங்கம், பெருந்திரளான பெண்கள், மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.





தாராபுரம் சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி ஆலோசனைக்கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.ராணி வரவேற்புரையில், கழக மகளிர் தொண்டரணி இணை செயலாளர், முன்னாள் அமைச்சர் தமிழரசி ரவிக்குமார், கழக மகளிர் அணி துணைச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், முன்னாள் மேயர் ரேகா பிரியதர்ஷினி, தொண்டரணி துணை செயலாளர் சத்யா பழனிக்குமார், கழக மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் செ.உமாமகேஸ்வரி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெசாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாவட்ட துணை செயலாளர் பிரபாவதி பெரியசாமி, நகர கழக செயலாளர் எஸ். முருகானந்தம், திருவரங்கம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.பழனியாண்டி உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர மகளிர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### பல்வேறு மாவட்ட அரசு மருத்துவமனைகளில் தட்டுப்பாடு!

# குழந்தைகளின் உயிர்காக்கும் மருந்து கிடைப்பதை உறுதி செய்க!

## கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, செப். 24-

பல்வேறு மாவட்ட அரசு மருத்துவமனைகளில் பச்சிளம் குழந்தைகளின் உயிர்காக்கும் மருந்துகள் கிடைப்பதில் தட்டுப்பாடு நிலவுவதாக செய்திகள் வருகின்றன. அரசு உரிய நடவடிக்கை எடுத்து மருந்து கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுள்ளார்.



இது குறித்து கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. ட்விட்டரில் விடுத்துள்ள பதிவு வருமாறு:

சென்னை, தேனி, தருமபுரி, திருப்பூர், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், கரூர் உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பச்சிளம் குழந்தைகளின் உயிர்காக்கும் மருந்துகள் கிடைப்பதில் தட்டுப்பாடு நிலவுவதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

பிறந்த பச்சிளம் குழந்தைகளுக்கு மிகவும் அடிப்படைத் தேவையான உயிர்காக்கும் மருந்துகளை வழங்க முடியாமல் என்ன செய்துக்கொண்டிருக்கிறது சுகாதாரத் துறை?

இளம்பிஞ்சுகளின் விரலில் மோதிரம் மாட்டி விளம்பரம் தேடத் துடிக்கும் அக்கறையைக் குழந்தைகளின் உயிர்களைக் காப்பதில் கொஞ்சமாவது காட்ட வேண்டாமா?

குழந்தைகளுக்கான மருந்துகள் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதை தமிழ்நாடு அரசு உடனே உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மதுராந்தகம் தொகுதி கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து

# தி.மு.க. தொழிலாளர் அணியினர் தேர்தல் பிரச்சாரம்!

## அணிச் செயலாளர் பிடிசி ஜி. செல்வராஜ் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப்.24-

மதுராந்தகம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் மற்றும் ஒருங்கிணைந்த சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை கடலூர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் தொழிலாளர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்திட தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது வேண்டுகோள் வருமாறு :-

நடிகர் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசு, பதவியேற்ற 120 நாட்களிலேயே தமிழ்நாட்டின் ஏழையெளிய மக்களின் விரோத ஆட்சியாகவும் - தொழிலாளர் விரோத ஆட்சியாகவும் - “ரீல்ஸ்” ஆட்சியாகவும் நடைபெற்று வரும் நிலையில், மதுராந்தகம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, த.வெ.க. ஆட்சியின் அலங்கோலங்களையும், மக்கள் விரோத போக்கையும், தொழிலாளர் விரோதப் போக்கையும் மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட குக்கிராமம், கிராமம், சிற்றூர், பேரூர் என அனைத்து பகுதிகளிலும் முகாமிட்டு, அப்பகுதி வாழ் வாக்காளப் பெருமக்களிடம் தெளிவாக எடுத்துரைத்து பிரச்சாரம் செய்திட;

தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் மற்றும் ஒருங்கிணைந்த சென்னை - காஞ்சிபுரம் - திருவள்ளூர் - விழுப்புரம் - திருவண்ணாமலை - கடலூர் - வேலூர் - இராணிப்பேட்டை - திருப்பத்தூர் ஆகிய மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் தொழிலாளர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கழக வேட்பாளரான வழக்கறிஞர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்து, பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற பாடுபட, மேற்சொன்ன மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து நிர்வாகிகள் தீவிர வாக்குச் சேரிப்பில் ஈடுபட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மதுராந்தகம் – தாராபுரம் தொகுதி இடைத்தேர்தல்:

# தி.மு.க. இலக்கிய அணியினர் வாக்கு சேகரிப்பு!

## இலக்கிய அணி இணைச் செயலாளர் நந்தனம் நம்பிராஜன் அறிக்கை!

சென்னை,செப்.24,

தி.மு.க. தலைமை இலக்கிய அணி இணைச் செயலாளர் நந்தனம் நம்பிராஜன் அறிவிப்பு வருமாறு:

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் இடைத்தேர்தலில் தி.மு.க.தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் மதுராந்தகம் வேட்பாளர் இ.பரந்தாமன், தாராபுரம் வேட்பாளர் சுகன்யா ஆகியோரை ஆதரித்து கழக இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட, பகுதி இலக்கிய அணி நிர்வாகிகள் எந்தெந்த மாவட்டத்தில் நிர்வாகிகளாக இருக்கிறீர்களோ, அந்தந்த மாவட்டக்கழகச் செயலாளர் உடன் இணைந்து தேர்தல் பணியாற்ற வேண்டும். இந்த இடைத்தேர்தல் தேவையில்லாமல் மக்கள் தலையில் திணிக்கப்பட்ட தேர்தல் என்பதை மக்களுக்கு புரிய வைத்து கழகம் வெற்றி பாதையில் முன்னேறி செல்ல அச்சாரமாக இந்த தேர்தலில் இரண்டு தொகுதிகளிலும் கழகத்தை பெருவாரியாக வெற்றி பெற வைத்திட கழக இலக்கிய அணிதீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டு, இத்தேர்தலில் கழக இலக்கிய அணி பெரும் பங்காற்றி உழைத்திட வேண்டும். எனவேஇலக்கிய அணித் தோழர்கள் கலந்து கொண்டு திமுகவின் வெற்றிக்கு அரும்பாடுபட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நந்தனம் நம்பிராஜன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கழக வேட்பாளர் ஐ.பரந்தாமனை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்திட

# ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் தீவிரப் பணியாற்ற வேண்டும்!

## ஆதிதிராவிடர் நலக்குழு அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி வேண்டுகோள்!

திருவள்ளூர் செப் 24;

மதுராந்தகம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலை முன்னிட்டு, தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் மற்றும் ஒருங்கிணைந்த சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களின் ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள், மாநகர நிர்வாகிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் மதுராந்தகம் தொகுதிக்கு உட்பட்ட பெரும்பேர்கண்டிகையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி தலைமை வகித்தார். காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் பங்கேற்று சிறப்புரையாற்றி னார்.

கூட்டத்தில் அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி பேசுகையில்: மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் கழகத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர் ஐ.பரந்தாமனை வெற்றி பெறச் செய்யும் வகையில், ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் அனைவரும் இரவு-பகல் பாராமல் களப்பணியாற்றிட வேண்டும். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பொதுமக்களுக்குச் செய்யப்பட்ட சாதனைகளையும், குறிப்பாக ஆதிதிராவிட மக்களின் சமூக, கல்வி, பொருளாதார முன்னேற்றத்திற்காக நிறைவேற்றப்பட்ட பல்வேறு நலத்திட்டங்களையும் வீடு வீடாக எடுத்துரைத்து வாக்குச் சேகரி ப்பில் ஈடுபட வேண்டும். உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளைப் பெற்று, கழக வேட்பாளர் ஐ.பரந்தாமனை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யும் வகையில் தேர்தல் பணிகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும் அவர் பேசுகையில், அ.தி.மு.க. சார்பில் அண்மையில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர், தமிழக வெற்றிக் கழகத்தின் தூண்டுதலின் பேரில் தனது பதவியை ராஜினாமா செய்து, அக்கட்சிலே இணைந்து தற்போது அதே கட்சியின் சார்பில் வேட்பாளராக போட்டியிடுகிறார் பொதுமக்களை ஏமாற்றி அவர் நம்பிக்கை துரோகம் செய்த த.வெ.க. வேட்பாளருக்கு டெபாசிட் கூட கிடைக்காத வகையில் களப்பணியாற்றி!” திராவிட முன்னேற்றக் கழகத்தில் வேட்பாளரின் வெற்றிக்கான பணிகளை வேகப்படுத்த வேண்டும் என பல்வேறு ஆலோசனைகளை ஆ.கிருஷ்ண சாமி வழங்கினார். இதில் நிர்வாகிகள் அமுல் பொன்மலர், விபி ராஜன், புஷ்பராஜ், சிவாக்குமார், உள்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி முன்னாள் மாவட்ட பிரதிநிதி

# ஆ.வெங்கடேசன் முதலாம் ஆண்டு படத்திறப்பு நிகழ்ச்சி!

## மயிலை த.வேலு திறந்து வைக்கிறார்! தலைமை மு.செல்வகுமார்!

## முன்னிலை கே.ஏழுமலை எம்.சி. - கோ.சு.மணி - ராஜா அன்பழகன்!



சென்னை,செப்.24-

சென்னை தென் மேற்கு மாவட்டம் தியாகராய நகர் கிழக்கு பகுதி135வது வட்ட திமுக முன்னாள் மாவட்ட பிரதிநிதியும் மகளிர்அணியில் பணியாற்றும் மேகலாதேவி அவர்களின் கணவரும் இளைஞர்அணியில் பணியாற்றி வரும் வசந்த் வெங்கடேசன் வர்ஷா வெங்கடேசன் மற்றும் வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் விஷ்வா வெங்கடேசன் ஆகியோரின் தந்தையுமான ஆ.வெங்கடே சன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி முன்னிட்டு அவரது திருவுருவப்படத்தை மாவட்டச் செயலாளர் மயிலை.த.வேலு திறந்து வைக்கிறார்.

நிகழ்ச்சிக்கு கே.ஏழுமலை எம்.சி., கோ.சு.மணி, நந்தனம் கி.மதி, மயிலை எஸ். முரளி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜாஅன்பழகன் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்ற னர்.

வட்டச் செயலாளர் மு.செல்வகுமார் தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சிக்கு மாம்பழம் ஆ.சந்திரசேகர் எஸ். மோகன் எம்.எஸ்.பழனி மு.சத்யா, ஜி.டி.அம்பேத்கார் ஜெ.ஜானகிரா மன் எம்.ஆறுமுகம் ஆர்.லோகு மு.ம. செந்தில்குமார் வழக்கறிஞர் எம். கிருஷ்ணமூர்த்தி ஆர்.சக்திவேல் ஜி.பி.செந்தில்குமரன் கோ.உதயசூரியன் வழக்கறிஞர். லட்சுமிகாந்தன் தட்சன்.ஹரிஹரன் டி.கமல் நா.மோ.முரளி கே.எஸ். வெல்டிங்ராஜா பி.ஜெயக்குமார் பி.மாரி மு.மணிவண்ணன் இரா. பொன்னிவளவன். வி.பி. எஸ் ஜனார்த்தனன் ஜி. மோகன்ராஜ் ராமகிருஷ்ணன் பாபா.S.சுரேஷ் சந்துரு சாந்திபங்காரு எஸ். பாஸ்கர்.Mc கோமதிமணி வண்ணன் Mc கார்த்திகா பாஸ்கர் Mc மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கிளைக் கழக முன்னாள் இந்நாள் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு திரு உருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்துகிறார்கள்.

அன்னாருக்கு மனைவி மேகலா தேவி, மகன்கள் வசந்த் வெங்கடேஷ், விஷ்வா வெங்கடேஷ், மகள் வர்ஷா வெங்கடேஷ் ஆகியோர் உள்ளனர்.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தல் மெய்யூர் ஊராட்சி பகுதியில் சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதிக்கு உட்பட்ட 91,92 வட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் மாவட்ட கழக செயலாளர் மா. சுப்பிரமணியம், பகுதி செயலாளரும் மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் ஆகியோர் ஆலோசனைபடி வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து நடைபெற்ற பரப்புரையில் முன்னாள் அமைச்சர் பா.பெஞ்சமின், வட்ட கழக செயலாளர்கள் எம்.எம். ஜெயரத்தினம், எம்.கே.பி. அண்ணாதாசன், மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் எம்.சி.எழில்அரசு, ஆர்.ரசூல்தீன், மற்றும் எம்.பி. நவராஜ், எம்.பி.சீனிவாசன், எம்.எஸ்,சந்தானம் எம் .கே.பி.ராவனன், எம். எம். வினோத், பி.முத்து, எல். ராஜன் வட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் தலைமையில், சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணிச் சார்பில் சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலையில் அண்டவாக்கம் 38 வது பாகம் திருவள்ளுவர் நகர் பிள்ளையார் கோயில் தெரு பகுதியில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இந்த வாக்கு சேகரிப்பில் வரலட்சுமி,சந்திரகலா,கலைவாணி,குயின் அனிதா, அனுசியா, ஈஸ்வரி, சாந்தி,மாசிலாமணி, சரசு, விஜயகுமாரி, சத்ய நாகலிங்கம் மற்றும் அப்பாகத்தின் பொறுப்பாளர்கள் மணிபால், நாகப்பன், ஏகதாஸ், நவீன் குமார், முனியம்மாள், தில்சாத், ராஜகுமாரி, அஸ்வினி, யுவராணி. ஆகியோர் உடன் சென்று வாக்கு சேகரித்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் வாழ்த்துப் பெற்ற மதுராந்தகம் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்தில் சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்கு பகுதி சார்பில் மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் ஆலோசனைப்படி, பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ் தலைமையில் வாக்கு சேகரித்தனர். உடன் பொதுக்குழு உறுப்பினர் இ.இராஜேந்திரன், வட்டச் செயலாளர்கள் இரா.பாலன், தினேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.